
# திராவிடத்தால் வாழ்கிறோம்

795

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

57

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

# விமர்சனக் கணைகள் தொடர்கின்றன!

செங்கல்பட்டு மாவட்ட 2-வது மாவட்ட மாநாடு 1954-ஆம் ஆண்டு ஆகஸ்டு 21, 22 ஆகிய தேதிகளில் காஞ்சிபுரம், கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் நடைபெற்றது. முதல்நாள் சமூக சீர்திருத்த மாநாட்டிற்கு, கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் தலைமை தாங்க, எம்.ஜி.ஆர். தொடங்கி வைத்தார். இரண்டாவது நாள் அரசியல் மாநாட்டிற்கு, இரா.சு.தங்கப்பழம் தலைமை ஏற்க, திருச்சி எம்.எஸ்.மணி தொடங்கி வைத்தார்.

முதல் நாள் அறிஞர் அண்ணாவின் 'சந்திரமோகன்' நாடகமும், இரண்டாம் நாள் கலைஞரின் 'அம்மையப்பன்' நாடகமும் நடைபெற்றன.

இம்மாநாட்டில் பகுத்தறிவு, ஜாதிய ஏற்றத்தாழ்வு குறித்தெல்லாம் எம்.ஜி.ஆர். பேசியிருந்தார். "கலைவாணர் அவர்கள் எனக்கு பெரியாரின் 'குடிஅரசு' இதழைத் தந்து படிக்கச் சொன்னார். பகுத்தறிவு இயக்கத்துக்கு, கலைத்துறை வயலுக்கு உரம் போன்றது. தந்திரக்காரர்களால் அமைக்கப்பட்ட இந்தச் சமுதாயம், உழைப்பவனைக் கீழ் மகனாகவும், ஊரை ஏய்த்து வாழ்பவனை உயர் ஜாதிக்காரனாகவும் ஆக்கி, 'கோர விளையாட்டு' நடத்திக் கொண்டிருக்கிறது. இந்தக் கொடுமைமிக்க சமுதாய அமைப்பு மாறினால், தாங்கள் வாழும் உயர்நிலை தரைமட்டம் ஆகுமே, ஏமாற்றத்தில் அமிழ்ந்து கிடக்கும் மக்கள் விழித்துக் கொள்வார்களே என்று தந்திரக்காரர்கள் அதை அப்படியே பாதுகாக்க, எந்த முறையைக் கொண்டாவது முயற்சிக்கிறார்கள்" என்று பேசினார்.

ஆனால், பின்னாளில் அவரால் தொடங்கப் பட்ட அ.தி.மு.க. பகுத்தறிவுக்கு தொடர்பில்லாத இயக்கமாகவே நிலைத்தது.

ஓவியம் : சிகரன்




கலைவாணர் பேசுகையில், "சமூக சீர்திருத்தத்தைச் சட்டத்தால் செய்ய முடியாது. சமுதாயப் புரட்சி மூலம் மக்களைத் தாங்களாகவே உணரும்படிச் செய்து, அவர்களாகவே சீர்திருத்தக் கருத்துகளை ஏற்றுக் கொண்டால்தான், செய்யப்படும் சீர்திருத்தம் நிலைக்க முடியும்" என்றார். அவ்வாண்டு நடைபெற்ற குடியாத்தம் இடைத்தேர்தலில், காங்கிரஸ் கட்சி சார்பில், காமராஜர் போட்டியிட்டார். அவரை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சி போட்டியிட்டது. தி.மு.கழகம் காமராஜரை அத்தேர்தலில் ஆதரித்தது. இதற்காக கம்யூனிஸ்டுகள் தி.மு.க.-வைக் கடுமையாக விமர்சித்தனர். அந்த குற்றச்சாட்டுகளுக்கு, இரண்டாவது நாள் அரசியல் மாநாட்டில் பதிலளித்த பேரறிஞர் அண்ணா, "தி.மு.க. காமராஜரை ஆதரித்தது என்பது குலதரும கல்வித் திட்டத்தை ஒழிப்பதற்காகவே தவிர - காங்கிரசைக் கழகம் ஆதரித்தது எனப் பொருள் கொள்ள முடியாது. முற்போக்குக் கட்சிகளுக்குள் இருக்க வேண்டிய உறவை முறித்துக் கொள்கிறார்கள் கம்யூனிஸ்டுகள்" எனக் குறிப்பிட்டார்.

மேலும் அந்த மாநாட்டில் தி.மு.க.வின் வளர்ச்சியைப் பற்றிப் பேசிய அண்ணா, "ஒரு கழகமோ, கட்சியோ வளருகிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள, சாதாரணமான தனிப்பட்டவர்கள் கூடிப் பேசுகிற இடத்திலே, கடை வீதியிலே, சாலை வழியிலே அந்தக் கட்சியின் பெயரோ, கழகத்தின் பெயரோ அடிபட்டால், அதுவே போதுமான அத்தாட்சியாகும். அதை வைத்துப் பார்ப்போமானால் தி.மு. கழகத்தின் பெயர் அடிபடாத இடமே கிடையாது. கம்யூனிஸ்டுகளானாலும், காங்கிரசாராயினும், சோஷலிஸ்டுகளானாலும், பிரஜா சோஷலிஸ்டுகளானாலும், இசைக் கச்சேரிகளில் கடைசியாக மங்களம் பாடுவது போல, தி.மு.கழகத்தைக் கிண்டல் செய்தோ, கேலி பேசியோ, கண்டனம் தெரிவித்தோ எப்படியோ, ஏதாகிலும் நம்மைப் பற்றிப் பேசினால்தான் அவர்கள் கூட்டம் பூர்த்தியாகிறது என்கிற நிலைக்குத் தி.மு.கழகம் வளர்ந்திருக்கிறது" என்றார்.

அத்தகைய விமர்சனக் கணைகள் இன்றும் தி.மு.க.-வை நோக்கித்தான் வீசப்படுகின்றன. ஏனெனில், கழகம் வளர்ந்துகொண்டே இருக்கிறது! வீசுவோர் மாறிக்கொண்டே இருக்கிறார்கள்!

**...கூட்டம் திரளும்**

## சுயநலமே அ.தி.மு.க.வை ஆதரிக்கும்!

'தமிழ்ச் சமூகம் மீண்டும் அடிமையாக வேண்டும்' என்று நினைப்பவர்களே அ.தி.மு.க.வை ஆதரிப்பார்கள்' என எழுத்தாளர் மதிவண்ணன் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அவரது பதிவு இது.

"உலகத்தின் விளைச்சல்களில் முதல் தரமானவை எல்லாம் பார்ப்பனர்களுக்கே உரியவை. அவர்களைச் சேவித்து வாழ்வதே அவர்களைத் தவிர்த்த, மற்ற மனிதர்களின் கடமை என விதிக்கும் விவஸ்தை சிறிதுமற்ற கருத்தியலே பார்ப்பனியம்.

இப்படியொரு கருத்தியலை எதிர்ப்பில்லாமல் ஏற்று வாழ, அறிவற்றவர்களால் மட்டுமே சாத்தியம் என்பதால், வெகுமக்களுக்குக் கல்வியை மறுப்பதுதான் ஒரே வழி என அதற்குத் தெரியும். இப்படிப்பட்ட நிலையில்தான் காலனிய ஆட்சியின்போது கல்வி பரவலாக்கப்பட்டது. அதன் விளைவாகப் பார்ப்பன எதிர்ப்புக் கருத்தியல் இங்கு செல்வாக்கு பெற்றது. அதன் உச்சம் தி.மு.க. ஆட்சியைப் பிடித்த நிகழ்வு.

அறியாமையும், கடைந்தெடுத்த சுயநலமும் கொண்ட மக்களை எல்லாம் ஒன்று திரட்டி, தி.மு.க.வை எதிர்கொள்வதற்கென்றே உருவாக்கப்பட்ட கட்சி அ.தி.மு.க.

கல்வி மட்டுமல்லாது ஊடகமும் சமூகமயமாகி இருக்கும் சமகாலத்தில், அக்கட்சி தனது பொருத்தப்பாட்டை இழந்து அழிந்து போவதைத் தவிர, வேறு வழியில்லை. ஒருவர் அ.தி.மு.க.வுக்காக கண்ணீர் வடிக்கிறார் என்றால், அதுவும் எடப்பாடி பழனிசாமி ஆட்சியைப் பார்த்தபிறகும், கண்ணைக் கசக்குகிறார் என்றால், அவர் உள்ளூர தமிழ்ச் சமூகம் விழுமியங்களைத் தொலைத்த, இலக்குகள் எதுவுமற்ற அடிமைச் சமூகமாய் ஆகவேண்டும் என விரும்புகிறார் என்றே பொருள்!" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



## பேராசிரியருடன் ஒரு புகைப்படம்!



கே.வேணுகோபால்

1988-ஆம் ஆண்டு, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலையில் 'தமிழ் மன்றம்' தொடக்க விழாவுக்கு இனமானப் பேராசிரியர் அவர்கள் வருகை தந்தார். அன்றைய மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் த.சந்திரசேகர் இல்லத்தில், அப்போது ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், பேராசிரியரைச் சந்தித்து, புகைப்படம் எடுத்துக்கொண்டேன். என் அரசியல் வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான தருணம். படத்தில் அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் பெரியண்ணன், திராவிட இயக்க மூத்த முன்னோடி ஏ.பி.ராசு, இளைஞர் அணிச் செயல்வீரர் பி.டி.அரசக்குமார் ஆகியோர் உள்ளனர்.

**– வழக்கறிஞர் கே.வேணுகோபால்,**
**முன்னாள் மாவட்டக் கழகப் பிரதிநிதி,**
**விராலிமலை ஒன்றியம், புதுக்கோட்டை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்


57

**சுயமரியாதை-சமத்துவம்-சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

# இஸ்லாமும், இன்பத் தமிழும்...

ஒன்றிய அரசு கொண்டு வரவுள்ள 'வக்ஃபு வாரிய திருத்தச் சட்ட'த்தை எதிர்த்து, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் ஒருமனதாகத் தீர்மானம் நிறை வேற்றியுள்ளன. இந்தியா முழுவதும் இஸ்லாமி யர்களுக்கு எதிரான வன்முறை வெறியாட்டங்கள் எப்போதுமில்லாத அளவுக்கு அதிகரித்துள்ளன. மண்ணுக்கு அடியில் துயில்கொண்டிருக்கும் இஸ்லாமிய எலும்புக்கூடுகள் கூட, பா.ஜ.க.-வின் பாசிச கோரத்திற்கு இரையாகாமல் இல்லை. பிணங்களைக் கூட விட்டுவைக்காமல், சூறையாடுகிறது மதவாத பா.ஜ.க. அரசு.

இதற்கு முற்றிலும் வேறான சூழல் தமிழ்நாட்டில் நிலவுகிறது. இன்று நேற்றல்ல, வரலாறு நெடுகவே இஸ்லாமிய மக்களை அணுகுவதில், பிற மாநிலங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் அப்பட்டமான வித்தியாசம் நிலவி வந்துள்ளது. இதற்கான காரணம் என்ன? இந்திய முஸ்லிம்களிடமிருந்து தமிழ் முஸ்லிம்கள் வேறுபடும் புள்ளி எது? தமிழ் முஸ்லிம்கள் திராவிட இயக்கத்துடன் காட்டிய நெருக்கத்திற்கான காரணமென்ன?




இந்தக் கேள்விகளுக்கான பதிலை ஆய்வு நோக்கில் வழங்கும் நூல்தான் முனைவர் எஸ்.எம்.அப்துல் காதர் ஃபக்ரி எழுதியிருக்கும், 'திரவிடியன் சாஹிப்ஸ் அண்ட் பிராமிண் மவுலானாஸ்: தி பாலிட்டிக்ஸ் ஆஃப் தி முஸ்லிம்ஸ் ஆஃப் தமிழ்நாடு' (*Dravidian Sahibs and Brahmin Maulanas: The Politics of the Muslims of Tamil Nadu 1930-1967*), என்ற இந்நூல்.

2008-ஆம் ஆண்டு வெளியான இந்தப் புத்தகம் 1930-ஆம் ஆண்டு தொடங்கி தி.மு.கழகம் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்த 1967-ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் நடைபெற்ற தமிழ்-இஸ்லாமிய அரசியல் மீது கவனம் குவிக்கிறது. குறிப்பாக, காலனிய காலத்திலும் பிரிவினைக்குப் பிறகான இந்திய அரசியல் சூழலிலும் தமிழ் முஸ்லிம்கள் தங்களை எப்படி அடையாளப்படுத்தி கொண்டார்கள் என்பதற்கு, மிகத் தெளிவான பதில்களை வழங்குகிறது.

நீதிக்கட்சி காலம் முதலே பார்ப்பனர் அல்லாதார் என்ற அடையாளம், இஸ்லாமியர்களையும் உள்ளடக்கிய ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. தந்தை பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய சமயத்திலும், முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதும் அவருக்கு உறுதுணையாக 'திராவிட-தமிழர்களாக' தங்களை அடையாளப்படுத்திக் கொண்டு ஏராளமான இஸ்லாமியர்கள் களத்தில் நின்றுள்ளனர்.

தலித் மக்கள், மதிப்புடன் தங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள பெரியார் பரிந்துரைத்த மதங்களுள் இஸ்லாம் பிரதானமானது. பார்ப்பன பனியா ஆதிக்கத்திற்கு எதிராக, தந்தை பெரியாரும்-பேரறிஞர் அண்ணாவும் 'திராவிட நாடு' கேட்ட நேரத்தில் மதச் சிறுபான்மையினரையும் உள்ளடக்கியே அதனை வரையறை செய்தனர்.

பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு விடுதலை பெற்ற இந்தியாவில் குடிமக்களாக அடையாளப்படுத்திக்கொண்ட இஸ்லாமியர்கள் தங்களை தேசியவாதிகளாக நிரூபித்துக் கொள்ளவேண்டிய அழுத்தம் இருந்தது, இது பல இஸ்லாமியர்களைப் பொதுவாழ்க்கையில் இருந்தே விலகச் செய்தது.

ஆனால், தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் அவர்களுக்கு ஒரு மாற்றை வழங்கியது. திராவிட இயக்கம் கட்டமைத்த 'திராவிடர்-தமிழர்' என்ற அரசியல் அடையாளங்கள், இஸ்லாமியர்களுக்குப் பாதுகாப்பாக அமைந்தன. முன்னாள் அமைச்சர் சாதிக் பாட்சா 1972-ஆம் ஆண்டு முதல், தான் மறைந்த 1994-ஆம் ஆண்டு வரை தி.மு. கழகத்தின் பொருளாளராக விளங்கினார் என்ற செய்தி தமிழ்நாட்டு அரசியலில் தமிழ் இஸ்லாமியர்கள் அந்நியமாகாமல் இருந்ததை உறுதிப்படுத்துகிறது.

**...வாசிப்போம்.**

## கருவூலம்

### திராவக வீச்சில் தப்பிய கலைஞர்!

1986-ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின்போது, விழுப்புரம் அருகே கூட்டேரிப்பட்டு என்கிற இடத்தில், கூட்டத்தில் பேசினார் கலைஞர். கூட்டம் முடித்து விட்டு காரில் ஏறுகையில், கலைஞரை நோக்கி திராவகமும், கண்ணாடித் துகள்களும் அடைக்கப்பட்ட பாட்டிலை வீசினார்கள் விஷமிகள். அந்த பாட்டில் காரின் முன்புற கண்ணாடியில் சிதறி விழுந்தது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131